# சிங்கப்பூரில் திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியின் அறுபதாம் ஆண்டு வைரவிழா



ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர் சங்க சிங்கப்பூர் கிளை, கல்லூரியின் வைர விழாவைக் கொண்டாடியது. சுல்தான் பள்ளிவாசல் இணை மண்டபத்தில் 11.5.2011 காலை 10 மணி முதல் மதிய உணவு வேளை வரை நடைபெற்ற விழா அக்கல்லூரியின் அறுபதாண்டு கல்விச் சேவைகளையும் சாதனைகளையும் எடுத்துரைக்கும் இனிய கொண்டாட்டமாக அமைந்தது.

தமிழகத்தின் திருச்சி நகரில் 1951ல் ஜமால் முஹம்மது கல்லூரி தொடங்கப்பட்டது. 1981 வரை சென்னை பல்கலைக் கழகத்தில் இணைக்கப்பட்டிருந்த அக்கல்லூரி, 1982 முதல் திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் அங்கம் வகிக்கிறது.




சிங்கப்பூரில் வாழும் ஜமால் முஹம்மது கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் கிளை 30.1.2011ல் அதிகாரபூர்வமாகத் திறக்கப்பட்டது. அந்தக் கல்லூரியில் பயின்ற 500 பட்டதாரிகள் குடியரசில் பல துறைகளில் பணியாற்றிவருகின்றனர்.

சங்கத்தின் தலைவர் முஹையித்தீன் அப்துல் காதர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக ஜமால் முஹம்மது கல்லூரியின் முதல்வர் முனைவர் எம்.ஷேக் முஹம்மது, கல்லூரியின் செயலாளர் ஏ.கே.காஜா நஜீமுதீன் சாஹிப், துணைச் செயலாளர் எம்.ஜே.ஜமால் முஹம்மது சாஹிப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிண்டாவின் தலைமை நிர்வாகி ராஜசேகர், மினி என்வைரன்மெண்ட் குழுமத்தின் நிர்வாக இயக்குநர் ஹாஜி எஸ்.எம்.அப்துல் ஜலீல், சிங்கப்பூர் இந்திய வர்த்தக, தொழில் சபையின் தலைவர் நாராயண மோகன், கலைப்பித்தர் கழகத் தலைவர் ஆர்.கலாமோகன் ஆகியோர் முன்னிலை வகித்து சுருக்கமாக பாராட்டுரை நிகழ்த்தினர்.

ஜமால் முஹம்மது கல்லூரியின் வளர்ச்சியையும் அறுபது ஆண்டுகால சாதனைகளையும் முஹையித்தீன் அப்துல் காதர், கல்லூரி முதல்வர் மற்றும் செயலாளர் எடுத்துரைத்தனர்.

தங்கள் கல்லூரி ஒரு ஞானத் தாய், ஜமால் என்ற கருவறையிலிருந்து பிறந்து வந்துள்ள அனைவருக்கும் வரவேற்பு நல்கும் நிகழ்ச்சி இது என்று நெகிழ்ச்சியுடன் அவர்கள் படம் பிடித்துக் காட்டினர். இன்று 9625 மாணவர்கள் இக்கல்லூரியில் படித்து வருகின்றனர். இவர்களில் 2879 மாணவிகளுக்கு மாலை நேர வகுப்புகள் நடத்தப்படுகின்றன. கல்லூரியின் காஜாமியான் விடுதியில் 2500 மாணவர்களுக்கு இட வசதி உள்ளது.

மொழியியல், அறிவியல், பொருளியல் சமூகவியல், கணிதவியல், நிர்வாகம் உள்ளிட்ட பல துறைகளில் பட்டக் கல்வி, முதுநிலைப் பட்டம், M.Phil, Ph.D வகுப்புகளை ஜமால் முஹம்மது கல்லூரி நடத்தி வருகிறது.

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர் சங்க சிங்கப்பூர் கிளை பயன்மிக்க பல திட்டங்களைச் செயல்படுத்தவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

